கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) — (ள): சேந்தமங்கலத்திலுள்ள அரசாங்க மருத்துவமனையை விரிவுபடுத்த திட்டம் எதுவும் இல்லை. அந்த மருத்துவமனைக் கட்டிடத்திற்கு விசேஷ மராமத்துகள் செய்யும்படி பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு எழுதப்பட்டுள்ளது.

திரு. வி. ஆர். பெரியண்ணன்: அந்த மருத்துவ மனையின் சுவர்களுக்கு வெள்ளையடித்து ஐந்தாறு ஆண்டு காலம் ஆகிறது. இரண்டாண்டுகளுக்கு முன்பு மாவட்ட அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் பொது மாரமத்து இலாகா என்ஜினியர்களைக் கேட்டபொழுது 'எங்களிடத்தில் கட்டிடம் ஒப்படைக்கப்படவில்லை' என்று சொன்னார்கள். ஆகவே, கனம் அமைச்சரவர்கள் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி உடனடியாக மாராமத்து செய்வதற்கு ஆவன செய்வார்களா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அரசாங்கம் எடுத்துக் கொண்ட பிறகு அதற்கு என்னென்ன ரிப்பேர்கள் செய்ய வேண்டுமோ அவைகளுக்கு ஒரு மதிப்பீடு போட்டு பொது மாராமத்து இலாகாவிற்கு எழுதியுள்ளார்கள். அவர்களும் வேலையை ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது.

மாவட்ட வைத்திய அதிகாரி, திருச்சி

* 718 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்ட வைத்திய அதிகாரியை மாற்றம் செய்ய திருச்சி நகரசபை சர்க்காருக்கு சமீபத்தில் தீர்மானம் அனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) No.

(b) Does not arise.

Tractor Factory

* 719 *Q.*--SRI L. ANANDAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representation, dated 22nd April 1964, from Sri R. Venkatasubba Reddi requesting for the establishment of a tractor factory in the State for the manufacture of small garden tractors has been received by the Government; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No.

(*b*) Does not arise.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Considering the price of tractors which are necessary for agricultural operations.

will the Government consider the desirability of establishing Tractor Servicing Stations in the industrial estates that are being established?

THE HON. SRI R. VENKATARAMAN : I don't understand the question. If the hon. Member wants that Government should establish service centres, I don't think it is necessary. There are a number of private industries which are having these servicing facilities.

பொறியியல் பரிசு நிதி

*720 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பொறியியல் துறையில், மிக உயர்ந்த அடிப்படைத் தத்துவம் ஒன்றை ஆராய்ந்து காண்பவருக்கு ஒரு பெருந்தொகை அளிப்பதற்கு வாய்ப்பு அளிக்கும் வகையில் பரிசு நிதி Prize fund ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்ற மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையினை ஏற்று அமுலாக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா? ஆமெனில் எந்த ஆண்டு முதல்?

THE HON. SRI R. VENKATARAMAN : The recommendation is under examination.

புலவர் கா. கோவிந்தன் : நெடுஞ்சாலை ஆராய்ச்சி பிரிவினால் எவ்வளவு நல்ல பலன்கள் கிடைத்திருக்கின்றன என்பதைப்பற்றி பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் ஒரு முறை இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆராய்ச்சிகளுக்குச் செலவுசெய்வதால் நல்ல பலனளிக்கும். ஆகவே, இதை மனதிற்கொண்டு விரைவிலேயே இந்தச் சிபாரிசை ஏற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆராய்ச்சி அவசியம் என்பதைப் பற்றிக் கருத்து வேற்றுமை கிடையாது. ஆராய்ச்சிகளுக்கு 'பிரைஸ்' கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு எவ்வளவு செலவாகும், கொடுக்கிற பணம் கணிசமாக இருக்க நம்மிடத்தில் நிதி வசதி எப்படி இருக்கிறது என்பதெல்லாம் இப்பொழுது பரிசீலனையில் இருக்கின்றன.

தேயிலைத் தொழிற்சாலை

*721 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் கைத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நீலகிரி ஜில்லாவில் கூட்டுறவுத் துறையில் தேயிலைத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நீலகிரி மாவட்டத்தில் ஏற்கனவே இரண்டு தேயிலைத் தயாரிப்பு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் மேலும் 6 தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளையும், தொழில் கூட்டுறவு மத்திய சேவா சங்கம் ஒன்றையும் ஏற்படுத்துவதற்கான ஒரு விரிவான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.